திரு. அ. தேவேந்திரன் : தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டமாகிய தஞ்சை மாவட்டத்தில் ஒரு அரசு அச்சகம் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் அரசு அச்சகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நிதிவசதி பெருகியவுடன் கவனிக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : மாநில அரசின் அச்சுப்பணிகள் தனியார் அச்சகங்களில் கொடுப்பதற்குப் பதிலாக மத்திய அரசு அச்சகத்திற்குக் கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் யோசனையைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. ஏ. எம். இராஜா : மத்திய அரசுக்குச் சொந்தமான அச்சகங்கள் தமிழ் நாட்டில் எவ்வளவு இருக்கின்றன? மத்திய அரசு அவைகளைத் தமிழக அரசிடம் ஒப்படைத்துவிட்டு, தமிழக அரசின் மூலமாகத்தான் தங்களுடைய வேலைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்குத் தீவிரமான முயற்சிகளை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என் வி. நடராசன் : மூலக்கேள்விக்கு அப்பாற்பட்ட துணைக் கேள்வியாக இது இருக்கிறது.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, 50 லட்சம் ரூபாய் மூலதனத்திற்கு மேலேயுள்ள அச்சகங்களை யெல்லாம் அரசு தேச உடைமையாக்க எண்ணியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, இப்போதைக்கு அப்படி ஒன்றும் எண்ணம் இல்லை.

Recommendations of Road Transport Wage Board

*129 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the award of the Road Transport Wage Board has been implemented in full in the State—

(b) if not, the reasons therefor; and

(c) the steps taken for making the benefit available to the workers covered?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) சாலைப் போக்குவரத்து நிறுவனங்களுக்கான ஊதிய வாரியத்தின் பரிவுரைகளை இதுவரை இம் மாநிலத்தில் 105 மோட்டார் போக்கு வரத்து நிறுவனங்கள் செயல்படுத்தியுள்ளன.

(உ) ஊதிய வாரியத்தின் பரிவுரைகளைச் செயல்படுத்த வேண்டுமென்று எஞ்சிய நிர்வாகங்களையும் வற்புறுத்துமாறு துறை அதிகாரிகளுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. இத் தொழிலின் தொழிலதிபர்கள் மற்றும் தொழிலாளர் சங்கக் கூட்டம் ஒன்று

1971 ஜூலை 5]

19—6—1971 அன்று நடந்தது. அக் கூட்டத்தில் போக்குவரத்துத் தொழில் நிறுவனங்களின் தொழிலதிபர்களை ஊதிய வாரியத்தின் பரிவுரைகளை ஆகஸ்ட் மாதம் முதல் தேதிக்குள் செயல்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத்தினுடைய முடிவை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் ஆட்சேபம் தெரிவித்தார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வதாகக் கூறியிருக்கிறார்கள். மற்றவர்களிடமிருந்து தகவல் எதுவும் வரவில்லை. ஆகஸ்ட் 1-ம் தேதிக்குள் பரிவுரைகளை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும், இல்லாவிட்டால் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, ஆகஸ்ட் 1-ம் தேதிக்குள் அந்த பரிவுரைகளை அமல் நடத்தவில்லையென்றால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எத்தகைய நடவடிக்கையாக இருக்கும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அதுபற்றி இன்னும் முடிவு செய்யவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, ரோட் டிரான்ஸ்போர்ட் ரெகமண்டேஷன்கள் பலவற்றை ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் இலாகா அமல் நடத்தவில்லையென்று கூறப்படுகிறது. அதற்காக அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் ஆகஸ்ட் 1-ம் தேதிக்குள் பரிவுரைகளை அமல் நடத்தவில்லையென்றால், மற்றவற்றிற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறதோ, அந்த நடவடிக்கை மற்ற நிறுவனங்களின் மீதும் எடுக்கப்படும். ஆனால் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் இலாகா இத் திட்டத்தை ஏற்கனவே நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே; டிரான்ஸ்போர்ட் வேஜ் போர்டு மாதிரியாக வேறு பல வேஜ் போர்டுகளின் சிபாரிசுகளை அந்தந்த அமைப்புகள் ஏற்றுக்கொள்ளாமல் பல்வேறு சிக்கல்களை உண்டாக்கியிருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, இம் மாதிரியான சிபாரிசுகளைக் கட்டாயமாக அமல் நடத்த வேண்டுமென்று சர்க்கார் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'இந்தப் பிரச்சினை' என்று குறிப்பிட்டு எழுதியனுப்பினால், அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்,

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சாலைப் போக்கு வரத்து வாரியத்தின் பரிந்துரைகளில் முக்கிய அம்சங்கள் என்னென்ன ? அதை, சம்பந்தப்பட்டவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அதற்கான விளக்கங்கள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

Purchase tax on human hair

*130 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that this Government has imposed a purchase tax on the export of human hair; and

(b) whether the Government is aware of any attempts by the exporters to export human hair through other States?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) அரசியலமைப்புச் சட்டத்தின் 286-வது பிரிவின்கீழ் எந்த ஏற்றுமதிக்கும் விற்பனை வரியிலிருந்த விலக்கு உண்டு. தொடக்க நிலையில் வரி விதிக்கப் படாத மனித முடியை ஏற்றுமதி செய்பவர் ஒருவர் வாங்கி அதையே ஏற்றுமதி செய்தால், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 7ஏ பிரிவின்கீழ், கொள் முதல் வரி விதிக்கப்படும்.

(இ) வணிகர்கள் மனித முடியை வேறு மாநிலங்களுக்கு அனுப்பி அங்கிருந்து ஏற்றுமதி செய்த நேர்வு எதுவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமாகக் கொள்முதல் வரி எவ்வளவு விதிக்கப்படுகிறது ? ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதன் காரணமாக அந்நியச் செலாவணி நிறையக் கிடைப்பதால், கொள்முதல் வரியிலிருந்து, விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் முன்பு படித்த விடையைச் சரியாகக் கவனித்திருந்தால், உறுப்பினர் அவர்களுக்கு விளங்கியிருக்கும். அரசியலமைப்புச் சட்டத்தின் 286-வது பிரிவின்கீழ் எல்லா ஏற்றுமதிக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு உண்டு. தொடக்க நிலையில் வரி விதிக்கப்படாத மனித முடியை ஏற்றுமதி செய்பவர் ஒருவர் வாங்கி அதையே ஏற்றுமதி செய்தால், தமிழ்நாடு பொதுவிற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 7-ஏ பிரிவின்கீழ், கொள்முதல் வரி விதிக்கப்படும்.